முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புலத்தீசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.10.2018, வியாழக்கிழமை

1. **தரும சக்தியே ஆறுமுக அரங்கா**
**தரணி வென்றிட ஞானியாக வந்த**
**முருகனே ஞானத் தலைவனே**
**முழுமை ஞானியே உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
**இருபானை திகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 25ம் நாள் 11.10.2018, வியாழக்கிழமை)**
**இயம்பிடுவேன் புலத்தீசர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
ஓங்கார சக்தியாக விளங்கும்
ஞானதேசிகனார் ஞான விளக்கம்
ஞாலமதில் ஏற்கும் மக்கள்

4. மக்களெல்லாம் அரங்கன் மூலம்
மாதவ பலம் சக்தி கிட்டி
ஆக்கமுடன் ஞானிகள் துணைபட
அழிவில்லா பெரும் பாதுகாப்பு பெறுவர்

5. காப்பு தரும் கந்தவேலனின்
கருணைமிக்க மாதருமத்தை
ஒப்புக் கொண்டு ஏற்று வருகின்ற
உலகோர்கள் அனைவரும் தருமவான்களாக

6. ஆகியே அரங்கன் மாற்றும்
அறமிக்க ஞான உலகினில்
வகைபட சக்தி பெற்றுமே
வல்லமைபட இடம் பெறுவர்

7. இடம் பெறுவர் பதவி சேவையென
இணையில்லா பொறுப்பு ஏற்று
தடையற மேன்மை பெறுவர்
தலைமை உயர்வு என பலவாற்

8. பலவாற் சிறப்பு தகுதி பெற்று
பாருலகில் ஞானிகள் ஆவர்
சலனமற தொடர் சேவைகளை
சரணடைந்து மக்கள் செய்ய

9. செய்யவே கலி இடர்களெல்லாம்
செப்பிட விரண்டோடியே
அய்யமற ஞானச் சூழலாக
அமைதிமிக்க நல்லுலகம் ஆகி

10. ஆகியே அரங்கன் மூலமாக
ஆறுமுகன் அமைக்க உள்ள
அகிலம் வியக்க ஞானயுகம்
அருள் ஞானிகள் மூலம் அமையும்

11. அமையவே அற்புதம் நடக்க
அரங்கனை நோக்கி மக்களே
நேமமுடன் வந்து இணைந்திடுவீர்
நிகழ்த்திய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் புலத்தீசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களைச் செய்து செய்து தருமத்தின் தலைவனாக தருமசக்தியின் வடிவமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே. தருமத்தினால் கலியுகத்தை வென்று ஞானயுகம் அமைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அவதார ஞானியே, முருகப்பெருமானே, ஞானத்தலைவனே முழுமை பெற்ற மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 25ம் நாள் 11.10.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே புலத்தீசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புலத்தீசர்.

ஓங்கார சக்தியாம் முருகப்பெருமானின் சக்தி வடிவமாக விளங்கிடும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் ஞான விளக்கங்கள் எல்லாம் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் விளக்கங்கள் ஆகும். ஆதலினால் ஆறுமுக அரங்கமகானார் கூறும் ஞானவிளக்கங்களை ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடிக்கின்ற மக்கள் எல்லாம் அரங்கமகாதேசிகனார் மூலமாக மாதவங்கள் செய்த பலனைப் பெற்று ஆக்கமுடன் ஞானிகள் துணையுடன் அழிவில்லாத பெரும் பாதுகாப்பை பெற்று சிறப்படைவார்கள்.

சர்வ பாதுகாப்பை தந்தருள வல்லமை பெற்றதும் உலகை காத்து நிற்கின்றதுமான அரங்கமகா தேசிகனாரின் மாதருமங்களை, அருள் பாதுகாப்பு தந்தருளும் கந்தவேலன் முருகப்பெருமானே நேரில் தோன்றி செய்யும் அரங்கனின் தர்மங்களை கருணைமிக்க தருமங்களை அவரவரும் உளமார ஏற்றுக் கொண்டு ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த வாய்ப்பாக, முருகப்பெருமான் அருளிய வரமாக எண்ணி பயபக்தியுடன் பணிந்து செய்து, பொருளுதவிகள் செய்து தருமத்தில் பங்கு கொண்டு செயல்பட்டு வரவர, தருமம் செய்கின்ற அவர்களெல்லாம் தருமவான்களாக ஆகி அரங்கன் செய்யும் உலகப்பெருமாற்றத்திலே அறம்மிக்க ஞானஉலகினில் முறையோடு பங்கு பெற்று சக்திகளை அடைந்து வல்லமையுடன் ஞான உலகினில் இடம் பெறுவார்கள்.

ஞானயுகத்தினில் ஞான உலகினில் அவர்கள் பதவிகளை வகிப்பர். இணையில்லாத பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு செம்மையாய் பணிகளைச் செய்து உயர்வான நிலையை

அடைந்து, தலைமை பொறுப்புகளை வகித்து பலவாறாய் சிறப்பான தகுதிகளைப் பெற்று இவ்வுலகினில் ஞானிகளாகவும் ஆகிடுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை குலகுருவாக ஏற்றுக் கொண்டு மனச்சலனம் இன்றி தொடர்ந்து தொண்டுகளை அரங்கன் திருவடி பணிந்து சரணடைந்து செய்து வரவர, அவர்களைப் பற்றிய கலியுக துன்பமெல்லாம் மிரண்டு ஓடியே இவ்வுலகினில் கலியுக துன்பம் குறைந்து உலகமெலாம் ஞானச்சூழலாக உருவாகி உலகம் அமைதிமிக்க நல்லுலகமாக ஆகி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முருகப்பெருமானே நேரில் தோன்றி அமைக்க இருக்கின்றதும், உலகமே வியக்கும்படியாக உள்ளதுமான ஞானயுகமானது உலகின் எல்லா ஞானிகளின் மூலம் விரைந்து அமைந்திடும்.

ஞானயுகம் உலகினில் அமைந்து அற்புதங்கள் நடந்திட உலக மக்களே உத்தமகா ஞானி ஆறுமுக அரங்கமகாதேசிகனாரை அவர் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நோக்கி விரைந்து வந்து ஆறுமுக அரங்கனின் அருள் தரிசனம் அடைந்து ஆறுமுக அரங்கன் உலக நலன் கருதி உலக மாற்றம் கருதி செய்கின்ற தானதருமப் பணிகளிலே தவறாமல் இணைந்து தொண்டுகள் செய்து பொருளுதவிகள் செய்து உலகப்பெருமாற்ற பணிகளை செய்து வாருங்கள். இந்த உலகம் விரைந்து ஞானயுகமாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் புலத்தீசர்.

–சுபம்–